# கருஞ்சட்டைத் தமிழர்

ஆசிரியர்: சுப.வீரபாண்டியன்

வார இணையஇதழ்(சனிக்கிழமை தோறும்) • திருவள்ளுவர் ஆண்டு 2056, மே 03, 2025

Weekly E-paper • May 03, 2025



# பஹல்காம் படுகொலைகள்!

சுப. வீரபாண்டியன்

## சுயமரியாதை இயக்க நூற்றாண்டு மாநில மாநாடு, கோவை

## பெரியார்! பெரியார்! பெரியார்!

தலையங்கம்

கருஞ்சட்டைத் தமிழர்

ஆசிரியர்: சுப.வீரபாண்டியன்

வார இணையஇதழ்(சனிக்கிழமை தோறும்) ●திருவள்ளுவர் ஆண்டு 2056, மே 03, 2025 Weekly E-paper ●May 03, 2025

# பஹல்காம் படுகொலைகள்!

**சுப. வீரபாண்டியன்**



பதறித்தான் போயிற்று, அந்தச் செய்தியைப் படித்தவர்களின் மனமெல்லாம்!

சுற்றுலாவிற்காகக் காஷ்மீர் சென்ற பயணிகள் பலர், பயங்கரவாதிகளால் கண்மூடித்தனமாகச் சுட்டுக் கொல்லப்பட்டார்கள் என்பதை எப்படிப் பொறுமையாக ஏற்றுக் கொள்வது? 370 ஆம் பிரிவை நீக்கி விட்டோம், இனிமேல் காஷ்மீர் அமைதிப் பூங்காவாக இருக்கும் என்றார்கள்! ஆனால் அது இப்போது அமைதிச் சுடுகாடாக அல்லவா மாறிக் கொண்டிருக்கிறது.

படுகொலைகளைத் தொடர்ந்து வந்த இன்னொரு செய்தி, மேலும் ஓர் அச்சத்தை நாடு முழுவதும் விதைத்தது. கொல்லப்பட்டவர்கள் அனைவரும் இந்துக்கள் என்றும், ஒவ்வொருவரின் பெயரையும் தெரிந்து கொண்டே பயங்கரவாதிகள் துப்பாக்கிகளால் அவர்களைச் சுட்டார்கள் என்றும் செய்தி பரவிற்று!

அது உண்மையாக இருக்க முடியாது என்பது மட்டும் எல்லோருக்கும் வெளிப்படையாகத் தெரிந்தது ! எந்த ஒரு பயங்கரவாதக் கும்பலும், சுடப்பட இருக்கிற ஒவ்வொருவரின் பெயரைக் கேட்டு, அவர் ஆதார் அட்டையை எல்லாம் சரி பார்த்து விட்டுப் பிறகு சுடுவார்கள் என்பது நாடகத்தில் கூட நடக்க முடியாத செய்தி!

கண்மூடித்தனமாக அவர்கள் சுட்டார்கள் என்பதுதான் உண்மை என்பதைப் பின்னால் வந்த செய்திகள் உறுதிப்படுத்தின. இறந்து போனவர்களில் பலர் இஸ்லாமியர்களாக இருந்தனர்!

எப்படி இருந்தாலும், அந்த பயங்கரவாதிகளின் அடையாளங்கள், அவர்கள் இஸ்லாமியர்கள் என்பதை உறுதிப்படுத்துகின்றன என்று கூறுகின்றனர். இருக்கலாம்! ஆனால், சிதறி ஓடிய இந்துக்கள் பலரை அங்கு காப்பாற்றியவர்களும் இஸ்லாமியர்கள்தாம்!

**நடந்து போன பயங்கரம் மறுபடியும் நிகழாமல் பார்த்துக் கொள்வதே ஓர் அரசின் கடமையாக இருக்க முடியும். அதனைப் பயன்படுத்தி மீண்டும் ஒரு மதக் கலவரத்தை உருவாக்க நினைப்பவர்கள் யாராக இருந்தாலும், அவர்களும் பயங்கரவாதிகளே!**

நடந்து போன பயங்கரம் மறுபடியும் நிகழாமல் பார்த்துக் கொள்வதே ஓர் அரசின் கடமையாக இருக்க முடியும். அதனைப் பயன்படுத்தி மீண்டும் ஒரு மதக் கலவரத்தை உருவாக்க நினைப்பவர்கள் யாராக இருந்தாலும், அவர்களும் பயங்கரவாதிகளே!

# சுயமரியாதை இயக்க நூற்றாண்டு மாநில மாநாடு, கோவை

கோவை இரத்தினசபாபதி புரம் மாநகராட்சிக் கலையரங்கம் 2025, ஏப்ரல் 26ஆம் நாள் காலை முதல் இரவு வரை சுயமரியாதை வீரர் தளபதி பட்டுக்கோட்டை அழகிரி நினைவரங்கத்தில் கொடியேற்றம், நாடாளுமன்ற உறுப்பினர் கனிமொழி கருணாநிதி அவர்களின் மாநாடு தொடக்கவுரை, கருஞ்சட்டை அரங்கம் - மாணவர் அரங்கம் - இளைஞர் அரங்கம் - அரசியல் அரங்கமும், 27 ஆம் நாள் காலை கவியரங்கம் - ஊடகவியலாளர் அரங்கம் - சமூகநீதி அரங்க நிகழ்ச்சிகள்....
















சுயமரியாதை இயக்க
நூற்றாண்டு விழா
ஆசிரியர் கி.வீரமணி


சுயமரியாதை இயக்க
நூற்றாண்டு விழா
மாநில மாநாடு
திராவிடம் 100




சுயமரியாதை இயக்க
நூற்றாண்டு விழா
மாநில மாநாடு
கருத்தரங்கம்
கவியரங்கம்
கலையரங்கம்
ஸ்ரீனிவாஸ்
கோவை-2


Srinivas
COIMBATORE-2


ஸ்ரீனிவாஸ்
கோவை-2












நூற்றாண்டு விழா






சுயமரியாதை இயக்க
நூற்றாண்டு விழா
மாநில மாநாடு
ஸ்ரீனிவாஸ்
கோவை-2













திராவிட இயக்கத் தமிழர் பேரவை








ஸ்ரீனிவாஸ்
கோவை-2


ஸ்ரீனிவாஸ்
கோவை-2






ஸ்ரீனிவாஸ்
கோவை-2


சுயமரியாதை இயக்க
நூற்றாண்டு விழா











## பொது மாநாடு, கயல் தினகரன் மேடை, சிவானந்தா காலனி மாலை 07 மணி




மாநாடு நிறைவுப் பேருரை மாண்புமிகு துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின், தலைமை, பேரவைத் தலைவர் பேராசிரியர் சுப.வீரபாண்டியன், வரவேற்புரை துணைப் பொதுச்செயலாளர் காசு. நாகராசன், தீர்மானங்கள் முன்மொழிபவர் பொதுச்செயலாளர் சிற்பி செல்வராசு, சிறப்புரை மின்துறை அமைச்சர் வி.செந்தில் பாலாஜி, பீட்டர் அல்போன்ஸ், அருள்மொழி, நன்றியுரை பேரவைப் பொதுக்குழு உறுப்பினர் வி.பி.கோவிந்தராசு .






படங்கள்: ஸ்டுடியோ சரவணன், மணி மாடர்ன் ஸ்டுடியோ. (8754036257)

*தமிழராய் வேர் பிடி ! உலகெலாம் கிளை விரி!*

# கருஞ்சட்டைத் தமிழர்

## பெரியார்! பெரியார்! பெரியார்!

சுயமரியாதை இயக்க முதல் மாநில மாநாடு 1929 ஆம் ஆண்டில் செங்கல்பட்டிலும், இரண்டாவது மாநாடு ஈரோட்டில் 1930 ஆம் ஆண்டிலும், மூன்றாம் மாநாடு விருதுநகரில் 1931ஆம் ஆண்டிலும் நடைபெற்று இருக்கின்றன. நீண்ட இடைவெளியின் பின்னர் சுயமரியாதை இயக்க நான்காம் மாநில மாநாட்டை 'நூற்றாண்டு விழா மாநாடாக' திராவிட இயக்கத் தமிழர் பேரவை 2025 ஏப்ரல் 26 மற்றும் 27 ஆகிய நாட்களில் மிகச்சிறப்பாகக் கோவையில் நடத்தி இருக்கிறது என்பது திராவிட இயக்க வரலாற்றில் பதிவாகிவிட்டது.

மாநாட்டுக் கொடியேற்றம், கவிஞர் கனிமொழியாரின் தொடக்கவுரை, கருஞ்சட்டை அரங்கம், மாணவர் அரங்கம், இளைஞர் அரங்கம், அரசியல் அரங்கம், கவியரங்கம், ஊடகவியலாளர் அரங்கம், சமூகநீதி அரங்கம், உரிமை முழக்கப் பேரணி, திராவிட இயக்கத் தமிழர் பேரவைத் தலைவர் பேராசிரியர் சுப.வீரபாண்டியன் தலைமையில், மாண்புமிகு துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின் நிறைப் பேருரை என்று அமைக்கப் பட்டிருந்த நிகழ்ச்சி நிரலும், அவைகள் பிசுறுதட்டாமல் நடத்தப்பட்டப் பாங்கும் திராவிட இயக்கத்தின் மரபு என்பதைப் பேரவை உறுதிசெய்துவிட்டது.

"செவிக்குணவு இல்லாத போது சிறிது வயிற்றுக்கும் ஈயப் படும்" என்பார் பெரும் புலவர் வள்ளுவர். இம்மாநாட்டில் இரண்டுமே நிறைவாக இருந்தது.

பேரவையின் தலைமை திட்டமிட்டு வடிவமைத்த மாநாட்டை, வெற்றிபெறச் செய்ய வேண்டும் என்பதை உழைப்பின் மூலம் நிரூபித்து விட்டார்கள் துணைப் பொதுச் செயலாளர் காசு. நாகராசன் தலைமையில் இயங்கிய கோவையின் பேரவைப் பொறுப்பாளர்கள் என்றால் மிகையில்லை.

மாநாடு முதல்நாள் போர்ப்படைப் பறையிசையுடன் தொடங்கி, மறுநாள் கொடிகளைக் கையேந்திப் புறப்பட்ட பேரணிப்படை தளபதி உதயநிதி ஸ்டாலினிடம் 'உரிமை முழக்க'த்தை ஒப்படைத்தது. ஏற்றுக்கொண்ட அவர் நிறைவு செய்தார் மாநாட்டை!

ஆசிரியர்:
சுப.வீரபாண்டியன்
பொறுப்பாசிரியர்
எழில்.இளங்கோவன்
உதவி ஆசிரியர்கள்:
வெற்றிச்செல்வன்
சாரதா தேவி
வெளியீடு:
திராவிட இயக்கத் தமிழர் பேரவை

இணையதளம்:
www.keetru.com,
www.karunchattaibooks.com
மின் அஞ்சல்:
karunchattai@gmail.com
டுவிட்டர்: suba_vee
தொடர்புக்கு
120 என்.டி. ராமராவ் தெரு,
ரங்கராஜபுரம், கோடம்பாக்கம்
சென்னை- 600 024,
தொலைபேசி: 044-2472 6408